1990 ஏப்ரல் 19]

ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்.

***4994.** திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலியில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 22 அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இருந்தும்கூட ஆக்ஸ்ஃபோர்டு ஆஃப் சவுத் என்று சொல்லக்கூடிய அந்தப் பராமரிப்பு இல்லங்கள் நெல்லையிலே இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது. ஆகவே அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு முன்பு ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் இருந்தது. மாவட்டம் பிரிக்கப்பட்டபோது அந்த இல்லம் வ. உ. சிதம்பரனார் மாவட்டத்திற்குள் வந்து இருக்கிறது. திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் அரசு ஆதரவற்ற குழந்தைகள பராமரிப்பு இல்லம் தற்போது இல்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த மாவட்டத்தில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் துவக்க வேண்டும் என்று சமூக நல இயக்குநர் அவர்கள் அரசுக்கு குறிப்பு அனுப்பி இருக்கிறார். அது பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. ரவி அருணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அரசு பராமரிப்பு இல்லங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுக் கொண்டிருக்கிற 22 அரசு பராமரிப்பு இல்லங்களிலும் பெரும்பாலான இல்லங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சில அரசால் வழங்கப்பட்டவை ; சில தனியார் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டவை ; சில நன்கொடையாளர்களால் வழங்கப்பட்டவை. எனவே எந்த இல்லத்துக்கும் தொலைக் காட்சிப் பெட்டி இல்லை என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களோ அங்கே ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அவரே வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*5342. திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குளச்சல் சட்டமன்றத் தொகுதி, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கக்கோட்டுதலை ஊராட்சி, கட்டிமாங்கோடு ஊராட்சி, குருந்தன்கோடு ஊராட்சி, தலக்குளம் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இல்லை.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கக்கோட்டுதலை, கட்டிமாங்கோடு, குருந்தன்கோடு, தலக்குளம் ஆகிய ஊராட்சி பகுதிகள் மிக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்காத பகுதி. ஆகவே, அந்த ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருகின்ற பொழுது அந்தக் கிராமங்களிலே நீர் ஆதாரம் இல்லாத சூழ்நிலையிலேதான் பக்கத்திலே இருக்கிற நீர் ஆதாரம் இருக்கிற இடத்திலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டிய நான்கு ஊராட்சிகளிலும் 27 குடியிருப்புகள்